பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 09 வெள்ளிக்கிழமை (25.10.1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 251

## இனப்பிரச்சினை விவகாரம்:

# சர்வதேச மத்தியஸ்தத்தை நிராகரிக்கிறார் கதிர்காமர்!

## பிரபாகரன் மீது நீதிமன்றத்தில் குற்றம் சுமத்துவது நியாயமாம்!

சென்னை, ஒக்ரோபர் 25

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சர்வதேச மத்தியஸ்தம் அவசியமற்றது; பொருத்தமற்றது.

– இவ்வாறு "இந்து" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரது பேட்டியின் முக்கிய பகுதி வருமாறு:

இன நெருக்கடி விடயத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கு என்ன இருக்கிறது? இலங்கையின் பிரதான அரசியல் பேச்சில், அதாவது நாடாளுமன்ற ஜனநாயக அரசியலில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நால்வரைக் காணவில்லை

தென்மராட்சி ஒக் 25

தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியிலிருந்து கடந்த ஐந்தாம் திகதி காலையில் ரியூசனுக்குப் புறப்பட்டுச் சென்ற மாணவனும் சந்தைக்குப் பொருள்களைக் கொண்டு சென்ற மற்றும் மூவரும் காணாமல் போயுள்ளனர்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான தாமு மாணிக்கம் (வயது 40), நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா தியாகராசா (வயது 40),

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதனன்று ஈழத் தமிழர் லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஒக் 25

யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் வகை தொகையின்றியும், காரணமின்றியும் கைது செய்யப்படுவதாகத் தெரிவித்து — அதனை ஆட்சேபித்து —

நேற்று முன்தினம் லண்டனில், இலக்கம் 10, டவுனிங் வீதியில் உள்ள பிரிட்டிஷ் பிரதமரின் இல்லத்துக்கு முன்னால் இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகளைப் பேணுவதற்கான லண்டன் அமைப்பு ஒன்றுஇந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-6)

## நாவற்குழிச் சம்பவத்தைக் கண்டித்து

# சுண்டுக்குளி மாணவிகள் நேற்று மௌன போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 25

நாவற்குழிச் சம்பவத்தில் உயிரிழந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி, அவரது சகோதரனும் சென் ஜோன்ஸ் மாணவனுமான குமாரசாமி பிரணவன் மற்றும் இருவரின் படுகொலைகளைக் கண்டிக்கும் மௌனப் பிரார்த்தனையும் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செய்யும் நிகழ்வும் நேற்று சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

நேற்றுக்காலை கல்லூரியில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தையடுத்து, உயர்தர வகுப்பு மாணவிகள், இனி பாடசாலை மாணவிகளுக்கு இது போன்ற சம்பவம் இடம்பெறக்கூடாது என்று கோரு வகையில் சுலோக அட்டைகளைத் தாங்கி மௌனப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கல்லூரி முன்றலில் அவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நேரம் அரை மணி பின் தள்ளப்படுகிறது

கொழும்பு, ஒக். 25

இலங்கையின் தற்போதைய நேரத்தை அரை மணித்தியாலம் பின் நோக்கி வைப்பதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்த மாற்றம் இன்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும்.

இன்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு தாண்டி சனிக்கிழமை முன்னிரவு 12.30 ஆனதும் கடிகாரத்தை மீண்டும் நள்ளிரவு 12 மணிக்குக் கொண்டு வர வேண்டும்.

இதன்படி கிறீன் வீச் நேரத்தில் இருந்து இலங்கை நேரம் 6 மணித்தியாலம் கூடுதலாக இருக்கும்.

இந்த ஆண்டு முதல் ஆறு மாத காலப் பகுதியில் மின்சார நெருக்கடி ஏற்பட்டதையடுத்து இலங்கையின் நேரத்தை ஒரு மணித்தியாலம் முன்நோக்கி வைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்தது தெரிந்ததே.

தற்போது நேரம் அரை மணித்தியாலம் பின் கொண்டு வருகின்ற போதிலும், அலுவலக, பாடசாலை நேரங்களில் மாற்றங்கள் இரா என்றும் அறிவிக்கப்பட்டது.

(உ-3)

# சுன்னாகத்தில் சண்டை!

வலி. தென் மேற்கு ஒக் 25

சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.15 மணியளவில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமார் 45நிமிட நேரம் கடும் சமர் இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது.

எனினும் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து இருதரப்புகளில் இருந்தும் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஏதும் வெளிவரவில்லை.

நேற்றுக் காலையும் சுன்னாகம் பகுதியில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன.

இதனால் சுன்னாகம் மற்றும் அதை அண்டிய பகுதிகளில் பதற்றம் நிலவியது; மருதனார் மடம் சந்தை நேற்று செயலிழந்தது; அப்பகுதியிலிருந்த சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி உட்படப் பல பாடசாலைகள் நேற்றுக் காலை பத்து மணியுடன் மூடப்பட்டன; கடைகள், அலுவலகங்களும் நேரத்துடன் மூடப்பட்டன. வீதிகளில் சன நடமாட்டமும் குறைந்து காணப்பட்டது. (உ-15-145

## பயணிகள் கப்பலில் எடுத்துச் செல்ல

## தடை விதிக்கப்பட்டுள்ள பொருள்களின் பட்டியல்

கொழும்பு, ஒக். 25

யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் செல்லும் பயணிகள் தம்முடன் எடுத்துச் செல்வதற்கு சில பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள்களின் பட்டியல் திருமலை பிரதேச செயலர் அலுவலகத்தில் பார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சுன்னாகம் பகுதியில் ஷெல் தாக்குதல்கள்

## ஒருவர் பலி; இருபது பேர் காயம்

வலி.தென் மேற்கு. ஒக். 25

சுன்னாகம் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றை அடுத்து ஏவப்பட்ட ஷெல்கள் சுன்னாகம் பால் பண்ணை வீதியில் உள்ள ரொட்டியாலடிப் பகுதியல— அதிகமுதாம் [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவில், சுன்னாகத்தில் சூட்டுக்கு இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25

சுன்னாகம் பகுதியில்நேற்று முன்தினம் மாலை இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சுன்னாகம் தெற்கிலும், இணுவிலிலும் இருவர் படுகாயமடைந்தனர்.

சுன்னாகம் தெற்கில் வீட்டின் பின்புறம் தோட்டப்பகுதியில் நின்று கொண்டிருந்தவரான தேவராசா புவனராசா (வயது 11) இணுவிலில் ஆலயம் ஒன்றின் முன்னால் நின்று கதைத்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவரான துரையப்பா கதிர்காமநாதன் (வயது 33) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் வேலைநிறுத்தம்

இந்தியாவில் போனஸ் உயர்வு கோரி சுமார் 10 லட்சம் தபால், தந்தி ஊழியர்கள் நேற்று முன்தினம் தொடங்கிய நாடு தழுவிய வேலைநிறுத்தத்தால் செய்தி தகவல்போக்குவரத்து சேவை ஸ்தம்பித்துள்ளது.

---

### விண்ணக வாழ்வின்
## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை
(முத்துத்தம்பி)
(சிறுவிளான் இளவாலை
வர்த்தகர், பெரியாமுல்லை, நீர்கொழும்பு.)

ஜனனம்: 25 — 10 — 1936
அமரத்துவம்: 30 — 09 — 1995

என்றும் எவர்க்கும் இனியவனாய்த் திகழ்ந்த
அன்பின் திரு உருவே அயராதுழைத்தவனே
உன்றன் பெயர்க்கியைந்த உயர் முத்தே என்றும் நீர்
இன்பம் பெறுக இறைவனிடம்.

அன்பின் இறைவா, உமதடியானாகிய முத்துத்தம்பி சுவாம்பிள்ளைக்கு நித்திய பேரின்ப சாந்தி அருளுக.

எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும் அருமை முத்துத்தம்பி! உமது விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நிறைவையும், உமது **60** ஆவது பிறந்த நாளையும் நினைவு கூர்ந்து, உம் பிரிவின் துயர்தாங்கி, நீர்கொழும்பில் வதிந்து வரும், அருமை மனைவியாகிய பொலின் மரியா (றோசா), நேச மகன் யோசவ் பிரான்சிஸ் நிமால் குடும்பத்தினர் (பிரான்ஸ்), பாசமிகு புத்திரிகள் செல்வி. ஜெறால்டின் மீறா, செல்வி மொறின் பப்ரிஸ்ராறதினி இவர்களுடன் இணைந்து, உமக்கு எம் இதய அஞ்சலியை அன்புடன் செலுத்துகின்றோம்.

என்றும் உமது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து
இளவாலையிலும் இடம்பெயர்ந்தும்
வாழ்ந்திருக்கும்
உமதருமை உற்றார், உறவினர்.

(8936)

---

## இரண்டாம் வருட நினைவஞ்சலி

மண்ணில்: 17 — 04 — 1923



விண்ணில்: 25 — 10 — 1994

**அமரர் R. D. மயில்வாகனம்**
(பொடித்தம்பி)
(Retired Valuation Inspector)
திதி: **1—11—1996**

ஈராண்டு போனாலும் உங்கள் அன்பு முகம் மறக்கவில்லை அழுதுபுரண்டாலும் கவலையும் தீரவில்லை. அன்பினைப் பொழிந்து எம்மை ஆளாக்கிய அப்பா! நித்தம் உங்கள் நினைவுகள் தினமும் எம்முன் ஆடுதப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி: ம. நாகேஸ்வரி
பிள்ளைகள்: குகதாசன், வசந்தா, சண்முகதாசன. சாரதா, யோகதாசன், கிருஷ்ணதாசன்
மருமக்கள்: சத்தியதேவி, தெய்வேந்திரன், ஜெயக்குமார், சிவரூபி.
பேரப்பிள்ளைகள்: சுதர்சன, சுலகஷன், பிரியதர்சினி, நிரோஷன், Radish, விமலினி, பிரசாந்தன், செந்தூரான் மற்றும் சகோதரிகள், உற்றார், உறவினர்.

ம. குகன்,
''கயிலை'', வரணி.

(43150)

---

## முன்னேறிய இராணுவம் திரும்பியது

கொழும்பு, ஒக்.25

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேற்கே போரதீவை நோக்கி கடந்த செவ்வாயன்று முன்னேறிச் சென்ற இராணுவத்தினர் மீண்டும் தங்களது முகாம்களுக்குத் திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள காட்டுப் பகுதிக்கே இராணுவத்தினர் முன்னேறித் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## ஆசிரியர் பயிற்சி விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக்.25

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1997 ஆம் ஆண்டில் பயிற்சி பெறுவதற்காக ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மொத்தம் பத்துப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு நாள் இம்மாதம் 31ஆம் திகதியாகும்.

விவரங்களை இரண்டு கலாசாலைகளிலும் உள்ள 20.9 96 ஆம்திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

(அ)

## மிதி வெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

கூலிக்கு வீடுவளவு துப்பரவு செய்யச் சென்ற ஒருவர் அங்கே இருந்த மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

சங்குவேலியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த இராசதுரை பாஸ்கரன் (வயது 28) என்பவரே கால் துண்டிக்கப்பட்டுக் காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## 3 கப்பல்கள் இன்று வருகின்றன!

யாழ்ப்பாணம் ஒக். 25

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் மூன்று கப்பல்கள் இன்று காங்கேசன்துறைக்கு வரவிருப்பதாக யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமாலை திருகோணமலையில் இருந்து புறப்பட்டு இன்று வரும் இக்கப்பல்கள் ஒருதொகுதி பயணிகளை ஏற்றிக் கொண்டு திருமலை திரும்பும் என தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — திருமலையில் இருந்து யாழ். செல்வதற்கு போதிய பயணிகள் இல்லாத காரணத்தால் இச்சேவையை அடுத்த வாரத்தில் இருந்து இடை நிறுத்த வேண்டிய நிலையேற்பட்டுள்ளது என்று திருமலை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(உ-3)

## பரீட்சை முடிவுகள்

கொழும்பு, ஒக்.25

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டு விசேட பரீட்சையாக நடத்தப்பட்ட —1995 ஆம் ஆண்டுக்கான- ஜி சி ஈ. (சாதாரண தரப்) பரீட்சை, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் இவ்வாண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கான [illegible] மாதத்தில் வெளியாகும் என பரீட்சைத் திணைக்களம் அறி[illegible] (உ-3)

---

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கிருஷாந்தி குமாரசாமி

மற்றும் அவரது தாயார், சகோதரர், அயலவர்
அனைவருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

வண்ணச் சிறு குயிலாய் - நீர்
சிறகடித்த அந்த நாட்கள்
வண்ண மயிலாய் - நீர்
கடந்து சென்ற பாதைகள்
உங்கள் முகம் காண ஏங்கி நிற்கின்றன -

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
ஆண்டு 9 'A' மாணவிகள்

(43341)

---

## கண்ணீர் அஞ்சலி

யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில்
பல ஆண்டுகளாக ஆசிரியராகவும்,
பிரதி அதிபராகவும் கடமையாற்றிய

### திருமதி இராசம்மா குமாரசாமி

அவர்களது அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், துன்பமும் அடைகின்றோம்.

அன்னாரின் மகத்தான ஆசிரியச் சேவை, கடமையில் கண்ணியம் ஆகியன எம் நெஞ்சை நெகிழ்க்கின்றன. கண்ணீர் சொரிபுரள மனம் வெதும்புகின்றது.

இவரோடு அகால மரணமெய்திய இவரது
மகள் கிருஷாந்தி, மகன் பிரணவன்,
ப. நோ. கூ. ச. ஊழியர் திரு. சி. கிருபாமூர்த்தி
ஆகியோருக்கும் எமது இதயக் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கிறோம்.

பழைய மாணவர் சங்கத்தினர்,
யா / கைதடி முத்துக்குமாரசுவாமி
மகாவித்தியாலயம், கைதடி.

(43325)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிப்பிள்ளை நாகம்மா

சரசாலை வடக்கில் கனகம்புளியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை ஆசிரியரின் அன்பு மனைவி நாகம்மா வன்னியில் 11-10-96 ல் இறைபதம் எய்திவிட்டார்.

இவர் நாகேஸ்வரி, நாகேஸ்வரன், இராசேஸ்வரன் (நோர்வே), நாகபூசணி (பேபி) இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், பொன்னுத்துரை, சிவயோகம், திருஞானசம்பந்தர், சிவானந்த சோதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-10-96 ல் வன்னியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
த. நாகேஸ்வரன்
(மகன்)

பொற்கொல்லர் வீதி,
மட்டுவில் கிழக்கு
சாவகச்சேரி.

(3345)

---

### திருமதி இராசம்மா குமாரசுவாமி
(உப. அதிபர், யா/கைதடி முத்துக்குமார சுவாமி மா.வி)

### செல்வி கிருஷாந்தி குமாரசுவாமி
(AL/1996 மாணவி, யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

### செல்வன் பிரணவன் குமாரசுவாமி
(A/L 1998 மாணவன், யா/ பரியோவான் கல்லூரி)

### திரு சிதம்பரம் கிருபாமூர்த்தி
(உதவியாளர், தென்மராட்சி ப. நோ. கூ. சங்கம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா குமாரசுவாமி அவர்கள் 07-09-96 இல் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு இ. குமாரசுவாமி (பிரதம லிகிதர், யா/ சுகாதார திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், பிரசாந்தி (கொழும்பு) அன்னாருடன் அகால மரணத்தைத் தழுவிக்கொண்டவர்களான கிருஷாந்தி, பிரணவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுப்பிரமணியம் (இளைப்பாறிய கணக்காளர் சிங்கப்பூர்), தெய்வநாயகி, அன்னபாக்கியம், சிவபாக்கியம், இராஜமணி (இளைப்பாறிய அதிபர், யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), நவரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர் யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களாகிய கந்தையா, தேவபாலசுந்தரம், சற்குணம் (இளைப்பாறிய நீர்ப்பாசன வேலை மேற்பார்வையாளர்), சாவித்திரி (ஆசிரியை, மாலைதீவு) ஆகியோரின் மைத்துனியும், மற்றும் அன்னாருடன் அகாலமரணமடைந்த திரு சிதம்பரம்-கிருபாமூர்த்தியின் அயலவருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
செல்வி சிவபாக்கியம் சந்திரசேகரர்
(சகோதரி)

''ஓச்சாட்'' கைதடி தெற்கு.
கைதடி.

(43340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில்மீட்கப்பட்ட ஆயுதங்கள் பொது மக்களிடமும் சிக்கினவா?

18 ஆம் திகதி அதிகாலை 1-30 மணிக்கு முல்லை முகாம் மீதான அதிரடித் தாக்குதல் ஆரம்பித்து — நான்கு மணி நேரம் கழியும் போது — விடியும் வேளையிலேயே முகாமின் கணிசமான பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் வந்து விட்டதையும்—

முகாமிலிருந்து தப்பிப் பிழைத்து வெளியேறிய படை அணிகள் இரு குழுக்களாகச் சேர்ந்துநின்று தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வழி வகையில் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் நேற்றைய தொடரில் பார்த்தோம்.

புலிகளின் அதிரடித் தாக்குதல் திடீரென உக்கிரத்துடன் ஆரம்பித்ததால் முகாமிலிருந்த படைஅணி முற்றாக நிலை குலைந்து என்ன செய்வது என்று பதறிய போது- பல பக்கங்களிலிருந்தும் மழை போல் முகாமுக்குள் தொடர்ந்து வந்து விழுந்து வெடித்த ஷெல்களினால் படுகாயமுற்று ஆங்காங்கே விழுந்து கிடந்த படையினரையும், உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களையும் அந்தந்த இடங்களிலேயே விட்டுவிட்டு உயிர் பிழைத்த சிப்பாய்கள் சிதறி ஓடினர்.

### மரம்ஏறித் தப்பினர்

எந்தப் பக்கம் ஓடுவது என்று தெரியாமல் நிலை குலைந்த சிப்பாய்களில் — மரம் ஏறத் தெரிந்த சிலர்— புத்தியாக முகாமுக்குள் இருந்த சில பனை மரங்களில் அவசர அவசரமாக ஏறி பனை வட்டுகளுக்குள் தஞ்சம் புகுந்து அங்கு தங்களை மறைத்துக் கொண்டனர், மற்றும் சிலர் முகாம் பகுதிக்குள்ளும் அதை அண்டிய பகுதிக்குள்ளும் — கைவிடப்பட்டு — பற்றை மண்டிக் கிடந்த — பாழும் கிணறு போன்ற — குழிகளுக்குள் புகலிடம் தேடிக் கொண்டனர்.

முல்லைத்தீவு முகாம் புலிகளால் முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட போதிலும்—

இவ்வாறு பனை வட்டுக்குள்ளும், பாழும் கிணறுகளுக்குள்ளும் ஒளித்துக் கொண்ட சில சிப்பாய்கள் புலிகளின் கண்களில் சிக்காமல் அந்த இடங்களிலேயே ஒளித்திருந்து பின்னர் தப்பினர்.

### தப்பிப் பிழைத்த சிப்பாயின் அனுபவம்

அப்படித் தப்பிப்பிழைத்த சிப்பாய் ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்:-

''அதிரடித் தாக்குதலால் நிலைகுலைந்து போன நான் தப்புவதற்கு வேறு வழியின்றி முகாமுக்குள் இருந்த பனை மரத்தில் 'விறு விறு' என ஏறி வட்டுக்குள் ஒளித்துக் கொண்டேன். மழைபோல் ஷெல்கள் கூவிக்கொண்டு முகாமுக்குள் வந்து விழுந்து வெடித்த வண்ணம் இருந்தன. நான் அச்சத்துடன் ஒளித்திருந்தேன்.

''மரத்தின் உச்சியில் நான் இருந்ததால் ஷெல் சிதறல்கள் என்னைப் பாதிக்கவில்லை.

''காலை விடிந்த போது— முகாமுக்குள் எதிர்ப்பில்லாத நிலையில் — பல நூற்றுக் கணக்கான புலிகள் சரளமாக நடமாடுவதைக் கண்டேன்.

''அப்போது புலிகளின் தலைவர் ஒருவர் அங்கு வந்தார். அவர் திடீரென உரத்த குரலில் தமிழில் ஏதோ உத்தரவுகளைப் பிறப்பித்தார். அவ்வளவுதான். நூற்றுக் கணக்கில் பொது மக்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியாதமாதிரி முகாமுக்குள் படையெடுத்து வந்து சேர்ந்தனர். அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் புலிகள் அல்லர். முகாமில் இருந்த ஆயுதங்களையும், ஏனைய பொருள்களையும் அள்ளிச் சென்று வாகனங்களில் ஏற்றும் வேலைகளில் முழு மும்முரமாக ஈடுபட்டனர். ஒரு சில மணி நேரத்தில் முகாமிலிருந்த பொருள்கள் அனைத்தும் துடைத்து வழிக்கப்பட்டு விட்டன.' — இவ்வாறு அந்தச் சிப்பாய் கூறியதாக சம்பந்தப்பட்ட செய்தி நிறுவனம் தெரிவித்தது.

### பொது மக்கள் உதவினார்கள்

முல்லைத்தீவுப் படை முகாமிலிருந்த பொருள்கள் மற்றும் ஆயுதங்களை அங்கிருந்து அகற்றி தமது வன்னித் தளங்களுக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் புலிகளுக்கு பக்கபலமாக பொதுமக்களும் இருந்தார்கள் என்பதை சில கொழும்புச் செய்தி நிறுவனங்களும் பகிரங்கப்படுத்தின.

இந்தச் செய்தி நிறுவனங்களும் — ஏன் விடுதலைப் புலிகள் அமைப்பும் கூட — படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் மற்றும் பொருள்களை முல்லை முகாமிலிருந்து அகற்றுவதிலும்,

## பகுதி - 6

மருத்துவ உதவி மற்றும் போருக்கான மற்றைய உதவி வேலைகளிலும் தமிழ்ப் பொது மக்கள் ஈடுபட்டனர் என்பதை பகிரங்கமாக அறிவிப்பதன் மூலம்—

விடுதலைப் புலிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் போராளிகள் மட்டுமல்லாமல் முழுத் தமிழ்ச் சமூகமே இணைந்து கொண்டு விட்டது என்ற கருத்தை சர்வதேச மட்டத்தில் ஊன்றச் செய்ய முடியும் எனக் கருதியிருக்கக்கூடும்.

### புலிகளுக்கு ஏற்பட்ட நெருக்கடி

ஆனால் இந்த வேலைகளில் பொது மக்கள் ஈடுபட்டதால் தமக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை மட்டும் புலிகள் பகிரங்கப்படுத்தவில்லை; சம்பந்தப்பட்ட செய்தி நிறுவனங்களும் தெரிந்தோ, தெரியாமலோ அது குறித்து தகவல்களையும் வெளியிடவில்லை.

முல்லை முகாமைத் தாக்குவதற்கான திட்டத்தை புலிகள் கனகச்சிதமாக வகுத்திருந்தார்கள்; கைப்பற்றும் ஆயுதங்களை தமது தளத்துக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன; புலிப் போராளிகளுடன் இப்பணியில் ஈடுபடுத்துவதற்கு பல நூற்றுக் கணக்கான பொது மக்களும் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தனர்; அவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களும், பயிற்சியும் கூட வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் அது செயற்படுத்தப்பட்ட போது சரியான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

### புலிகளின் நிலை

தாக்குதல் ஏற்பாடுகளின் போது இருந்த 'டென்ஷன்'-

இரவு முழுவதும் தாக்குதலில் ஈடுபட்டதால் ஏற்பட்ட களைப்பு —

விடிந்த போது முகாமின் கணிசமான பகுதி தங்கள் கைகளில் வீழ்ந்ததால் வந்த மகிழ்ச்சி —

இந்த வெற்றிக்காக களப்பலியான தமது தோழர்களின் மறைவால் ஏற்பட்ட கவலை —

இவ்வளவு எதிர்பாராத வகையில் பெருமளவு ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள், முகாம் பொருள்கள், இராணுவ ஆவணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியதால் ஏற்பட்ட திகைப்பு —

தங்களின் கட்டுப் பாட்டில் வந்துள்ள முகாம் பகுதியை அரசுப் படைகளின் மீட்பு அணிகள் வந்து மீண்டும் கைப்பற்றும் முன்னர் அல்லது விமானக் குண்டு வீச்சு விமானங்கள் வந்து குண்டு வீசி அழிக்கும் முன்னர் இந்த ஆயுதங்களையும், பொருள்களையும் அங்கிருந்து அவசரமாக எப்படியாகிலும் அகற்றியாக வேண்டும் என்பதால் ஏற்பட்ட மலைப்பு —

இவை போன்ற காரணங்களினால் இந்த விடயத்தில் புலிகளின் துணைத் தளபதிகள் சிலர் அவசரப்பட்டு விட்டதாகக்கூறப்படுகின்றது.

இது தவிரப் போரில் களப்பலியான புலிகளின் சடலங்களையும், உயிரிழந்த படையினரின் சடலங்களையும் கூட பாதுகாப்பாக — தகுந்த மரியாதையோடு — முகாம் பகுதியிலிருந்து அவசர அவசரமாக அகற்ற வேண்டிய தேவையும் புலிகளுக்கு இருந்தது.

இந்த அவசரங்கள் கருதி- உதவிக்கு தாங்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்து வைத்திருந்த ஆள்களுக்கு மேலதிகமாக - சில மைல் தொலைவுகளில் இருந்த கிராமவாசிகள், பொதுமக்களையும் இப்பணிக்கு அவசரமாக அழைத்து வந்தனர் புலிகள்.

### விடுப்புப் பார்க்கவும் சிலர் வந்தனர்

இத்தகைய யுத்தகளப் பின்னணியில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சரியாக முன்னரே அறிவுறுத்தப்படாத இத்தகைய பொதுமக்கள் —

அவர்களில் அனேகமானோர் 'முல்லைத்தீவு முகாம் புலிகளின் கைகளில் வீழ்ந்து விட்டதாம்! விடுப்புப்பார்ப்போம்!!'' என்ற எண்ணத்துடன் புலிகளின் வாகனங்கள், மினிபஸ்களில் தொற்றிக்கொண்டவர்கள் —

முகாமுக்குள் நூற்றுக்கணக்கில் கொண்டு வந்து இறக்கப்பட்டால் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா?

### எரியும் வீட்டில் பிடுங்குபவர்கள்

யாழ். குடாநாட்டின் பெரும்பகுதி அரச படைகளிடம் வீழ்வதற்கு முன்னர், இங்கு அடிக்கடி விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெறுவது வழமை. குண்டு வீசிய விமானங்கள் வானத்தில் எழுந்து மறைவதற்குள், குண்டு வீச்சுக்கு இலக்கான பகுதிக்கு விடுப்புப் பார்க்க விரையும் நம்மவர்கள் சிலர் - காயமுற்றவர்களை அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னரே - 'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற கணக்கில் குண்டு வீச்சால் சேதமுற்ற வீடுகள், பொது இடங்களிலிருந்து பொருள்களைச் சுருட்டிச் செல்வதில் தீவிரமாக இருப்பது எமக்குத் தெரியும்.

அதுவும் யாழ். குடாநாட்டிலிருந்து [illegible] வன்னிக்கு இடம் பெயர்ந்து, காடுகள், வயல்கள், குடியேற்றங்கள் போன்ற பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு, வேலை, தொழில், ஊதியம் இன்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு அடிப்படை வசதிகள் இன்றி- தவித்துக்கொண்டிருந்த மக்களை போதிய அறிவுறுத்தல் இன்றி இத்தகைய இடங்களில் 'பொது வேலையில்' ஈடுபடுத்தக் கொண்டுபோய் இறக்கினால் என்ன நடக்கும்?

### ஆயுதங்கள் அபேஸ்

தமது தாக்குதல் நடவடிக்கையைத் தொடர்வதிலும் -

## தொகுப்பு: கவி

தப்பிப் பிழைத்த படைகளைத் தேடி அழிப்பதிலும்—

கைப்பற்றிய முகாமை மீட்பதற்கு வரக்கூடிய அரசுத் துருப்புகளின் மீட்பு அணிகளைத் தடுத்து நிறுத்துவதிலும்—

விடுதலைப் புலிப் போராளிகள் தீவிரமாக இருக்கும் போது— இத்தகைய யுத்த உதவி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான பொதுமக்களின் நடவடிக்கைகளை சரியாகக் கண்காணிக்க முடியாமல் போயிற்று.

விளைவு?

களத்தில் இறங்கியவர்களில் கணிசமானோர் முகாமிலிருந்த பொருள்களில் ஒரு பகுதியைச் சுருட்டிக் கொண்டனர். வெறும் பொருள்களைச் சுருட்டிக் கொண்டால் அது குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் முகாமிலிருந்த சிறுரக ஆயுதங்கள் பல— கிரனேட்டுகள், பிஸ்டல்கள் போன்றவை— இவ்வாறு பொதுமக்களினால் 'அபேஸ்' செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டு விட்டன.

முல்லைத்தீவு முகாமை துடைத்தெறியும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த புலிகள் அப்போது இது குறித்து அதிகம் கவலைப்படவில்லை.

ஆனால் ஓரிரண்டு நாள்கள் கழிந்த பின்னர்தான் கிடைத்த உளவுத் தகவல்கள் நிலைமையின் விபரீதத்தை புலிகளின் தலைமைப் பீடத்துக்கு உணர்த்தின.

### பொதுமக்கள் கைகளில் ஆயுதங்கள் இருந்தால்...

காட்டுக்குள் திக்குத் திக்காக இருக்கும் பொதுமக்கள் வசம் கணிசமான அளவு ஆயுதங்கள் சிக்கிக் கொண்டு விட்டதால் அதன் விளைவு ஆபத்தானதாக இருக்கும்.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதில் அது நெருக்கடியை ஏற்படுத்தும். ஏன் தமது போராளிகளின் பாதுகாப்பைக் கூட அது கேள்விக்குறியாக்கி விடும் என்பதை உணர்ந்த புலிகள், பொதுமக்கள் அல்லது விடுப்புப் பார்க்க வந்தவர்கள் அள்ளிச் சென்ற ஆயுதங்களை மீட்பதற்காக பகிரங்க அறிவிப்புகளை விடுத்தனர். முல்லை முகாமை அண்டிய பிரதேசங்களில் இருந்த கிராமங்களுக்கு ஒலிபெருக்கிகள் பூட்டப்பட்ட வாகனங்களில் சென்ற புலிகள் அங்கு பகிரங்க அறிவிப்புகளை விடுத்தனர்.

### புலிகளின் அறிவிப்பு

''முல்லை முகாம் தகர்ப்பின் போது போராளிகளுக்கு உதவ வந்த பொதுமக்கள், மற்றும் பார்க்க வந்த பொது மக்கள், முகாம் வீழ்ந்த மகிழ்ச்சியில் தெரிந்தோ, தெரியாமலோ முகாமிலிருந்த பொருள்கள் சிலவற்றை— சில ஆயுதங்கள் உட்பட— தம்முடன் எடுத்துச் சென்றுவிட்டதாகத் தெரிகின்றது. இத்தகைய ஆயுதங்களை வைத்திருப்பது தேசத்துரோகக்குற்றமாகும். அவற்றை வைத்திருப்போர் தாமாக முன்வந்து எம்மிடம் அவற்றை ஒப்படைத்தால் அவர்கள் மன்னிக்கப்படுவார்கள்; அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. அப்படிச் செய்யாமல் தொடர்ந்து ஆயுதங்களை ஒளித்து வைத்திருப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.'' — என்று அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு முகாம் தகர்க்கப்பட்டு சில நாள்கள் கழித்து முகாம் பகுதியை நேரில் சுற்றிப் பார்வையிட்ட பின்னர் அண்மையில் யாழ். திரும்பிய மதகுரு ஒருவர் பின்வருமாறு கூறினார்:-

''முல்லைத்தீவு முகாமிலிருந்த ஆயுதங்களில் கணிசமான ஒரு தொகுதி பொது மக்களின் கைகளில் சிக்கிக் கொண்டது குறித்து புலிகள் அதிகம் கவலை கொண்டுள்ளனர். அவற்றை மீட்பதில் அவர்கள் தீவிரமாக இருக்கின்றார்கள். ஆயுதங்களை தம்முடன் எடுத்துச் சென்ற பொது மக்கள் பின்னர் புலிகள் விடுத்த எச்சரிக்கை அறிவிப்பால் கலவரமடைந்திருக்கின்றார்கள். என்றாலும் தாம் எடுத்துச் சென்ற ஆயுதங்களை புலிகளிடம் நேரில் சென்று ஒப்படைப்பதற்கு அவர்கள் அஞ்சுகின்றார்கள். அதனால் அவர்களில் ஒரு பகுதியினர் தாம் எடுத்துச் சென்ற ஆயுதங்களை தங்களுடன் வைத்திருக்காமல் யாரும் பார்க்காத வேளையில் வீதி ஓரங்களிலோ, பொது இடங்களிலோ போட்டு விட்டு அகன்று விடுகின்றார்கள் இப்படி பொது இடங்களில் போட்டு விட்டால் அவை எப்படியும் புலிகளின் கைகளுக்குப் போய்ச் சேரும் என்பது அவர்களின் எண்ணம்.

''இவ்வாறு வீதியோரங்களில் கிரனேற்றுகள், றவைகள் போன்ற ஆயுதங்கள் பெருமளவு வீசப்பட்டுக் கிடப்பதை முல்லை முகாம் பகுதிக்குச் செல்லும் வழியில் நான் கண்டேன்.''—என்றார் அந்த மதகுரு.

இது தாக்குதல் நடவடிக்கையின் பின் மேற்கொள்ளப்பட்ட உதவி வேலைகளில் பொதுமக்களை ஈடுபடுத்தியதால் ஏற்பட்ட நெருக்கடியைக் காட்டுகின்றது.

இதே சமயம்—

இந்த உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மக்கள் எவ்வாறு ஆடியும், பாடியும் குதூகலித்தார்கள் என்பதையும்—

அவர்களின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது என்பது பற்றிய மேலதிக விவரங்களையும் அடுத்து வரும் அத்தியாயங்களில் அவ்வப்போது பார்ப்போம்.

★ ★ ★

முல்லைத்தீவு முகாமை மீட்பதற்கான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக கூட்டுப்படை தலைமையகம் திருகோணமலை சீனக்குடா தளத்துக்குஇடம்மாறியதும்—

மீட்பு நடவடிக்கைகளைத் திட்டமிடும் முப்படைத் தள

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இராசையா ஜெயரத்தினம் ஆகிய எனது 750092632V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை யாழ் நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். பொ. இராசையா, இல. 07, மாரியம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (43321)

### ஆண்டு - 4

1997 இல் புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை 27-10-96 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தொடர்பு: புதிய நாவலர் கல்வி நிலையம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (43303)

### வகுப்புகள்

கேக் ஐசிங், தலையலங்காரம், தையற் கலை, சமையற் கலை, கைப்பணி வேலை, பூ வேலை, கோலம் ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: மயூரி ஹோம் சயன்ஸ் அக்கடமி, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (43302)

## ஆயிரம் ரூபா கள்ள நோட்டு: தமிழர் கைது!

கொழும்பு, ஒக். 25

ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நோட்டுகளை வைத்திருந்த தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கடை ஒன்றில் ஆயிரம்ரூபா போலி நோட்டு ஒன்றை மாற்றிக் கொண்டிருந்த சமயம் சிறுவ பொலீஸார் இவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சமயம் அவரிடம் இரண்டு ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் இருந்தன. விசாரணையைத் தொடர்ந்து பொலீஸார் அவரது வீட்டிலிருந்து மேலும் 80 போலி நோட்டுக்களைக் கைப்பற்றினர்.

அவருக்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரது பெற்றோர் மற்றுமொரு தமிழ்த் தம்பதியர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-4)

## லங்கா கல்யாணியில் தபால் பொதிகள்

வடமராட்சி, ஒக். 25

லங்கா கல்யாணி கப்பலில் 183 வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

பருத்தித்துறை துறைமுகத்துக்கு செவ்வாய்பிற்பகல் வந்து சேர்ந்த இக் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் சுமார் 180 மரங்களிலான மின்கம்பங்களும் இலங்கை மின்சார சபைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இது தவிர நிவாரணப் பொருள்களும் இக்கப்பலில் வந்துசேர்ந்துள்ளன. (இ-173)

## குமண புறப்பாடு

வடமராட்சி, ஒக். 25

குமண கப்பல் பொருள்களை இறக்கி முடிந்ததைத் தொடர்ந்து கடந்த செவ்வாயன்று பருத்தித்துறையிலிருந்து கொழும்பு புறப்பட்டுச் சென்றது. (இ-173)

## அறிவித்தல்

புதிய உயர்கலைக் கல்லூரி யாழ் பல்கலைக் கழக இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றிய வெளிவாரி மாணவர்களுக்கு.

தங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்ததற்கிணங்க சனிக்கிழமை (26-10-96) காலை 11 மணி (புதிய நேரம்)க்கு ஒன்றுகூடுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வெளிவாரி மாணவர்கள்

(சி-3340)

## திருமறைக்கலாமன்றம் கருத்தரங்கு

பொருள்: தீர்மானங்களின் உறுதிச்செயல்
DECISION MAKING

விதப்புரை: V. J. கொன்ஸ்ரன்ரைன் அவர்கள்

காலம்: 26-10-1996 (சனிக்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணி (புதியநேரம்)
இடம்: மன்ற கேட்போர் அரங்கு

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக்கல மன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

விற்பனைக்குண்டு பிரதி ரூபா 80/-
நாடகமும் அரங்கியலும் G.C.E. A/L புதிய பாடத்திட்டம் ''மன்னன் ஈடிபது'' (நாடகம்).

(சி-3342)

## யா/ செங்குந்த இந்துக் கல்லூரி ஆண்டு 6 அனுமதி-1997

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உரிய படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப இறுதித் திகதி: 15-12-96

அதிபர்

திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(43335)

## யா/ செங்குந்த இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொதுக் கூட்டம்

காலம்: 03 - 11 - 96 ஞாயிறு காலை 10.00 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

சங்க உறுப்பினர்களையும், பெற்றோர், நலன் விரும்பிகளையும் தவறாது சமுகந் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்

(43334)

## முதலாவது பிறந்தநின வாழ்த்து

25 - 10 - 1996

### ★ செல்வன் தனுக்ஷன் ★

சங்கத்தானையில் வசிக்கும்
மச்சேந்திரகுமார் - விமலாதேவி
தம்பதிகளின் செல்வப்புதல்வன் தனுக்ஷன்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று அவரது இல்லத்தில் அப்பா, அம்மா, அக்கா பிரியங்காவுடன் வெகு சிறப்பாக கொண்டாடுகின்றார். தனுக்ஷனை அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அத்தைமார் மச்சாள், சித்தப்பா, சித்தி, அண்ணாமார், அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், சித்தி, அண்ணா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தியடி விநாயகர் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

க மச்சேந்திரகுமார் (அப்பா)
(யாழ்/ பல்கலைக்கழகம்)
விமலாதேவி (அம்மா), பிரியங்கா (அக்கா).

ஜெயவதனி வாசா,
சங்கத்தானை (தட்டாதெரு),
சாவகச்சேரி.

(43319)

24 வருட சேவையூடாக,
உங்கள் பிள்ளைகளின்
உயர்ந்த எதிர்காலத்தை
உறுதிப்படுத்தும் கல்வி நிறுவனம்:

ESTD:-1973 REGD:- № J/7993

## The Express Institute

IRUPALAI - KOPAY.

### விஷேட அறிவித்தல்

குறைந்த அளவு இடவசதியே இது வரை மீள அமைக்கப்பட்டுள்ளமையால் எல்லா வகுப்புகளிலும் தற்காலிகமாக ஒரு பிரிவு மட்டுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல புதிய மாணவர்கள் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளமையினால் அவர்களுக்கான அனுமதியை வழங்குவதற்கு முன் எமது நிறுவனத்தில் கற்று இடம் பெயர்வால் மீண்டும் இணைய தாமதமாகும் மாணவர்களுக்கான அனுமதிகள் யாவும் அவர்களுக்கான சலுகைகள், உரிமைகளுடன்
இன்று முதல் நவம்பர் 05 ஆம் தேதிவரை
மட்டுமே வழங்கப்படும் என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

புதிதாக விண்ணப்பித்தவர்கள் நவ. 05 முதல் அனுமதிக்கப்படுவர்.

அதிபர்

96 - 10 - 25

(43336)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
மீண்டும் யாழ். நகரில்

ஆசிரியர்: திரு. பாலவாசன்

97 - கம்பனி (2-00 மணி)
98 - வங்கிக் கணக்கிணக்கக்கூற்று (1-00 மணி)
ஆரம்பம்: 26 - 10 - 1996
96 - DAY CLASS (11-00 மணி)
ஆரம்பம்: 28 - 10 - 1996

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(43304)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

1996-ம் ஆண்டு சேவையில்
வெள்ளி விழாக் காணும் நாயகர்கள்

1) லெப்டினன்ட் தா. நாகரெத்தினம்
2) திரு. சி. பாலசுப்பிரமணியம்
3) திரு. சோ. பேரின்பநாதன்
4) திரு. சு. பரமநாதன்
5) திரு. செ. வீரசிங்கம்

ஆகியோரை வாழ்த்துகின்றோம்.

— நலன்புரி சங்கம்

(43311)

## 31-ம் நாள் இதய அஞ்சலி



அன்னை மடியில்: 08 — 07 — 1928

இறைவன் அடியில்: 25 — 09 — 1996

அமரர்
யேசுசகாயம் அல்பிரட் அருளானந்தம்
(ஓய்வு பெற்ற தபால் திணைக்கள அத்திபட்சகர்)

'' கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்.
கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம். ''
யோபு, 1: 21

உங்களின் நினைவாக,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
சகோதரிகள்.

'' பிளசரீன் ''
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(43318)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உண்ணாவிரதம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அறுபத்து நான்கு இளைஞர்கள், தாம் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள தென்னிலங்கைச் சிறைகளில் கடந்த இருபதாம் திகதி தொடக்கம் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றார்கள்.

பல மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட தம் மீது இன்னும் வழக்குத் தொடராமல், விளக்க மறியலில் வைக்கப்பட்டிருப்பது நீதிக்குப் புறம்பானது என்று தெரிவித்து, அதனை ஆட்சேபித்தே அவர்கள் தமது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

சூரியப்பிரகாசம் - ஒன்று இராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து -

சூரியப்பிரகாசம் - இரண்டு இராணுவ நடவடிக்கை முடிவுற்ற பின்னர் ஏனைய மக்களுடன் - தமது பெற்றோர்களுடன் - சேர்ந்து வலிகாமத்துக்கு வந்து -

மீளக்குடியமர்ந்திருந்த போதே தாம் கைது செய்யப்பட்டதாகவும் அரசுக்கு எதிரான எந்த நடவடிக்கையின் போதும் தாம் கைது செய்யப்படவில்லை என்றும் அவர்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருந்த வலிகாமம் மக்கள் கடந்த ஏப்ரல் — மே மாத காலத்தில் மீளக்குடியமர்ந்த பின்னர் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்தன.

இவர்கள் எல்லாருமே விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதாகவே தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டோரில் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்; வேறு சிலர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்; பெரும் எண்ணிக்கையிலானோர் தடுப்புக்காவலில் அல்லது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்,

இப்போது சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்கள் விடயத்தில்,சட்டத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் பொலீஸார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். ஆனால் இன்னும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால், கடந்த மூன்றுமாத காலத்திற்குள் வழக்கைத் தொடர்ந்து, நீதித்துறை தனது பணியைச் செய்ய வழி விட்டிருக்கலாம்.

வழக்குத் தாக்குதல் செய்யத் தகுதியான ஆதாரங்கள் இல்லாவிடில் அவர்களை விடுவிக்க உதவுவதே பொலீஸாருக்கு நல்லது.

பொலீஸாரின் இயலாமைக்காக அல்லது தாமதத்துக்காக குற்றம் சுமத்தப்படாதவர்களை சந்தேக நபர்களாகவே நீண்ட காலமாகச் சிறையில் வாட்டுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இல்லையேல், யாழ்ப்பாண இளைஞர்கள் மீது வஞ்சம் தீர்ப்பதற்காகவே, பழி தீர்ப்பதற்காகவே அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற முடிவே மிஞ்சும். முந்திய அரசும் அதனையே செய்தது. இரண்டுக்கும் வித்தியாசமிருக்காதே!

## மாணவி பலி

தென்மராட்சி, ஒக். 25

தொய்வு வருத்தத்தின் வேதனை தாங்காது அதிக மாத்திரைகளை உட்கொண்டதாகக் கூறப்படும் 13 வயது பாடசாலை மாணவி ஒருவர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்தார்.

கடந்த செவ்வாய் மாலை மிருசுவில் ஒட்டுவெளியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிவக்கொழுந்து சிவராஜி என்ற மாணவியே உயிரிழந்தார்.

(உ-117)

## சிப்பாய் தற்கொலை

யாழ்ப்பாணம், ஒக். 25

துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டது.

சுன்னாகம் பகுதி இராணுவப் பிரிவைச்சேர்ந்த மோகன் ஆனந்த (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

(உ- 15)

### வடக்கு— கிழக்கு

## அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடு இடை நிறுத்தம்

### மோசடி குறித்து விசாரணை

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற வன்செயல்கள் காரணமாக தமது சொத்து, உடைமைகள் ஆகியவற்றை இழந்த அரச ஊழியர்களுக்கு ''ரேபியா'' நஷ்டஈடு வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கையில் ஊழல், துஷ்பிரயோகம் நடைபெற்றதாக அமைச்சர் அஷ்ரப்பின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் வைபவத்தை கடந்த மாதம் 21 ஆம் திகதி கொழும்பில் நடத்தும் நோக்குடன் தகுதியுள்ளவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும்—

அதில் கொழும்பில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவருக்கும் கடிதம் அனுப்பப்பட்டதாகவும்— தற்போது தெரிய வந்துள்ளது.

அரச ஊழியர் அல்லாத அந்த வர்த்தகருக்கு எவ்வாறு நஷ்டஈடு வழங்க முடியும் என்பது குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் சிலரும் இந்த நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர் எனக் கூறப்பட்டதையடுத்து இரகசியப் பொலீஸார் அழைக்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

## கைதான படையினர் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஒக். 25

நாவற்குழிப் பகுதியில் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட கிருஷாந்தி மற்றும் மூவரின் சடலங்கள் விமானம் மூலம் நேற்று கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஏழு இராணுவத்தினரும், இரு பொலீஸாரும் கை விலங்கிடப்பட்ட நிலையில் நேற்று விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-ரி)

## ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றோர் குறைவு

கடந்த ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்துக்குத் தோற்றிய பரீட்சாத்திகளில் 65சத வீதமானோர் சித்தி அடையவில்லை என்றும் லங்காதீப நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆங்கில பாடத்தில் சித்தி பெறுவதற்குத் தேவையான 35 புள்ளிகளை பெறத் தவறியோரின் எண்ணிக்கை 2 லட்சத்து 60 ஆயிரம் என தெரிவிக்கப்படுகிறது. (இ- 10)

## முல்லையில் மீட்கப்பட்ட....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிகளின் அணியோடு பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் ரத்வத்தையும் இணைந்து கொண்டார் என்பதையும் நேற்றைய தொடரில் பார்த்தோம்.

முதல் நாள்- 18 ஆம் திகதி -அரசுத் துருப்புகளைப் பொறுத்தவரை மீட்புப்பணி பல முனைகளிலும் பலனளிக்காத ஒன்றாகவே முடிந்தது.

வான் வழியாக துருப்புகளைத் தரையிறக்குவதிலும் சிக்கல்; தரை இறக்கிய துருப்புகளை தரையில் தக்க வைப்பதிலும் அழிவு; கடல் வழியாக கரையை எட்டுவதிலும் இக்கட்டு

அரச தரப்புக்கு இன்னோரன்ன கஷ்டங்களுடன் ஜூலை 18 ஆம் திகதி பொழுது சாய்ந்து 19 ஆம் திகதி புலர்ந்தது.

### ரத்வத்தையின் கோபம்

அதுவரை கடல்வழியாகத் துருப்புகள் முல்லைத்தீவுக் கரையை எட்டாததால் சீற்றமுற்றிருந்தபாதுகாப்புப்பிரதி அமைச்சர் ரத்வத்தை —

அதற்காக திருகோணமலை கடற்படைத். தளத்தில் பணியாற்றிய கடற்படை உயரதிகாரி ஒருவர் மீது சீறிவிழுந்தார்.

அவருக்குக் கொடுத்த பணியை உரிய விரைவில் செய்து முடிக்க முடியாவிட்டால் மூடை, முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு அவர் வீட்டுக்குப் புறப்படலாம் என்று அந்த அதிகாரி மீது பாய்ந்தாராம் ரத்வத்தை.

### கடற்படையின் முயற்சி

### கடற்புலிகள் தாக்குதல்

இந்த அழுத்தங்களுக்கு மத்தியில் 19 ஆம் திகதி பிற்பகலில், யாழ்ப்பாணத்திலிருந்து வர்த்தகக் கப்பல் ஒன்றில் அவசர அவசரமாகத் தருவிக்கப்பட்ட துருப்புகள், முல்லைத்தீவுக்கு சற்று தொலைவில் ஆழ்கடலில் வைத்து, ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி கடற்படைப் படகுகளுக்கு மாற்றப்பட்டன.

கடற்படையின் தரையிறங்கு கலங்களில் சற்றுத் தொலைவு வரை ஏற்றிவரப்பட்ட இத்துருப்புகள், முல்லைத்தீவு முகாமை அண்டிய கரையில் தரையிறங்குவதற்கு வசதியாக டிங்கிகளுக்கு மாற்றப்பட்டன.

19 ஆம் திகதி நேரம் மாலை 4.30 மணி.

கடற்படையின் தாக்குதல் படகுகள் பாதுகாப்பு வழங்க, துருப்புகளை ஏற்றிய டிங்கிகள் கரையை நோக்கி நகரத் தொடங்கியதும் கரையிலிருந்து கடற்புலிகளின் தாக்குதல் படகுகள் கடற்படைப் படகுகளை நோக்கி சீறிப் பாய்ந்து வர ஆரம்பித்தன.

கடற்புலிகளின் படகுகள் திடீரென நூற்றுக்கணக்கில் மோதலுக்குதயாராகிப் பாய்ந்து வந்த போது முல்லைக்கடல் உண்மையில் சண்டைக் கடலாயிற்று.

### 'ரணவிரு' தகர்ப்பு

கடற்படை அணிகளுக்குப் பாதுகாப்பாக வந்து கொண்டிருந்த - ஷங்காய் ரக அதிவேகத்தாக்குதல் படகான ''ரணவிரு'' மீது கடற்கரும் புலிகளின் தற்கொலைத்தாக்குதல் படகு ஒன்று மோதி வெடித்ததும் ''ரணவிரு'' தகர்ந்தது.

அதற்கு கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்த லெப்டினன்ட் கொமடோர் பராக்கிரம சமரவீரவும் அவருடன் அந்தத் தாக்குதல் படகில் பணியாற்றிய 35 கடற்படையினரும் ரணவிரு தகர்ப்பில் உயிரிழந்தனர்.

கடற்கரும்புலிகளான சயந்தன் (தம்பிப்பிள்ளை துரைரத்தினம் - அக்கரைப்பற்று), மிதுபாலன் (வேதரஞ்சன் ஜெகநாதன் - சங்கானை) ஆகிய இருவருமே 'ரணவிரு' தகர்ப்பில் காவியமான கடற்கரும்புலிகளாவர்.

### முயற்சி கைவிடப்பட்டது

முல்லைத்தீவு முகாம் தளத்தை அண்டிய கடற்கரைப் பிரதேசத்தில் தரையிறங்குவதற்காக கடல் வழியாகச் சென்ற படை அணிகள், 'ரணவிரு' அதிவேகத் தாக்குதல் படகின் தகர்ப்பின் காரணமாகவும், அதைத் தொடர்ந்து கடலில் கடற்புலிகள் காட்டிய கடும் எதிர்ப்புக் காரணமாகவும் அன்றைய தினம் (19 ஆம் திகதி) தமது முயற்சியைக் கைவிட்டு பின்வாங்கின.

''கடலில் கடற்புலிகளின் எதிர்ப்பு கடுமையாக இருக்கின்றது. பல டசின் கடற்கரும்புலிகளின் படகுகள் கடற்படை அணிகளை நோக்கி ஒரே சமயத்தில் சீறிக்கொண்டுவர முயற்சிப்பதால் ஒன்றைத் தாக்க மற்றையது மறுமுனையால் வந்து கடற்படைப் படகுகளில் மோதும் ஆபத்து இருக்கின்றது. அதனால் கரையை நோக்கிய நகர்வைத் தவிர்த்து பின்வாங்குகின்றோம்'' — என்ற பாணியில் முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் இருந்து [illegible] கடற்படை அதிகாரிகள் அடுத்தடுத்து அனுப்பிக் கொண்டிருந்த வானொலிச் செய்திகள் திருகோணமலை கடற்படைத்தளத்தில் ('டொக்யாட்'') உள்ள நடவடிக்கை அறைக்கு தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தன.

அதனால் அதுவரை கடல் வழியாகமேற்கொள்ளத்திட்டமிடப்பட்ட மீட்பு முயற்சி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

''ரணவிரு'' அதிவேகத் தாக்குதல் கலம் தகர்க்கப்பட்டதில் உயிரிழந்த 36 கடற்படைத் துருப்புகளின் சடலங்களிலும் ஏழு சடலங்களை மட்டுமே கடற்படையினரால் மீட்க முடிந்தது.

அந்தக் கடற்பகுதியில் கடற்புலிகள் தொடர்ந்து காட்டி வந்த கடும் எதிர்ப்புக் காரணமாக எஞ்சிய படையினரின் சடலங்களைத் தேடிப்பிடிக்கும் முயற்சியும் கைவிடப்பட்டது.

எனினும் அன்று முல்லைக் கடற்பரப்பில் நடந்தமோதல்களில் குறைந்தது கடற்புலிகளின் எட்டுப் படகுகளைத் தகர்த்ததாகவும், முப்பது கடற்புலிகளைக் கொன்றதாகவும் அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

### அரசுக்குப் புரிந்தது

அன்று 19 ஆம் திகதி கடலில் கிடைத்த அனுபவம் காரணமாக —

அவசர கோலத்தில் — மீட்பு முயற்சி என்ற பெயரில் முல்லைத்தீவுக் கடற்கரை— யில் கண்ணைமூடிக் கொண்டு துருப்புகளை இறக்க முயல்வது ஆபத்தானது; முட்டாள்தனமானது என்பது அரசுத்தரப்புக்குப் புரிந்தது. அத்துடன் போதிய முன்னேற்பாடுகள், திட்டமிடுகை, அதிகபலம் ஆகியவற்றுடன் செல்வதுதான் புத்திசாலித்தனமானது என்பதும் விளங்கியது.

இவற்றைச் செய்து கொண்டபின்னரே கடல் வழியாகக்களத்தில் இறங்குவது எனத்தீர்மானிக்கப்பட்டதால்அடுத்த நாள் — 20 ஆம் திகதி முழுவதும் — கடற்படையைப் பொறுத்த வரை கடல்வழி மீட்பு முயற்சிக்கான ஆயத்தங்கள் மட்டுமே செய்யப்பட்டன. மீண்டும் 21 ஆம் திகதி கடல்வழி முயற்சிகள் ஆரம்பமாகின. அந்த முயற்சிகள் பலித்தனவா? அடுத்து வரும் அத்தியாயங்களில் அதனைப் பார்ப்போம்.

★ ★ ★

### அலம்பிலில் நடந்தவை

இதே சமயம் அலம்பில் பகுதியில் ஹெலிகள் மூலம் தரையிறக்கப்பட்ட துருப்புகள் 19ஆம் திகதி தொடர்ந்து இரண்டாவது நாளாக கடும் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

முல்லைத்தீவு முகாம் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான சமயம் கொழும்பு சென்றிருந்த அந்த முகாமின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் லோறன்ஸ் பெர்னாண்டோ தமது முகாமை மீட்பதற்காகவும், அங்கு தப்பிப் பிழைத்திருக்கக் கூடிய தனது துருப்புகளைக் காப்பாற்றுவதற்காகவும் தாமே நேரடியாக மீட்பு முயற்சியில் குதித்து, அலம்பிலில் தரையிறங்கிய இரண்டாவது விசேட படை பட்டாலியன் (2SF) படையினருடன் சேர்ந்து கொண்டார்.

ஆனால் அவ்வாறு தரையிறங்கிய துருப்புகளை புலிகள் சுற்றிவளைத்துத் தாக்கிய போது பிரிகேடியர் பெர்னாண்டோவும் படுகாயமுற்றார். எனினும் ஹெலிக்கொப்டர்களைச் செலுத்திய விமானப்படை விமானிகளின் துணிகர முயற்சி மூலம் — புலிகளின் தாக்குதல்களுக்கு மத்தியில் — ஹெலிக்கொப்டர் ஒன்று அலம்பில் பகுதியில் தரையிறங்கி காயமுற்ற அவரை மீட்டுச் சென்றது.

அலம்பிலில் ஹெலி மூலம் முதலில் தரையிறக்கப்பட்ட மீட்பு அணி அதன் தளபதி லெப்டினன்ட் கேணல் பஸ்லி லாபீர் உட்பட 36 பேரை முதல் நாளே இழந்தது. அடுத்த நாள் பிரிகேடியர் பெர்னாண்டோ உட்பட பலர் படுகாயமுற்றனர்.

இவ்வாறு நடு இடம் ஒன்றில் தரையிறக்கப்பட்ட மீட்பு அணி புலிகளால் தொடர்ந்து சுற்றி வளைக்கப்பட்டு தாக்கப்பட்டதால் பல இழப்புகளைச் சந்தித்து நிலைகுலையும்நிலைமைக்குத் தள்ளப்பட்டது. அவ்வாறு சிதறும் நிலைக்குச் சென்ற போதும் அந்த மீட்பு அணி துணிகரமாகப் போர் புரிவதில் சளைக்கவில்லை. இறுதியாக அந்த மீட்பு அணி என்னவாயிற்று? அது கூண்டோடு அழிந்ததா? அல்லது தொடர்ந்து தாக்குப்பிடித்து, மேலதிக மான உதவிகளைப் பெற்று முல்லைத்தீவு முகாம் வரை முன்னேறியதா? அவற்றை அடுத்துவரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்டிக்குளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் அமர்ந்து இச்சம்பவத்துக் குத்தமது எதிர்ப்பை வெளிக் காட்டினர்.

அவ்வேளை ஆசிரியர்களும் மாணவிகளும் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

காலை ஆரம்பமான மாண விகளின் மௌனப் போராட் டம் மாலை முடிவடைந்தது.

''இன்றைய சமுதாயத்தில் மாணவர்களுக்கு பாதுகாப்பு இல்லையா?'' ''வெள்ளை உடைக்கு மதிப்பு இல் லையா?'' ''மாணவர்களுக்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவில்லையா? — என்று கேள்வி எழுப்பும் சுலோகங் களைக் கொண்ட அட்டை களை அவர்கள் தாங்கியிருந் தனர்.

(உ-3)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை செல்லம்மா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்லம்மா 23 - 10 - 1996 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், சின்னத்தங்கச்சி, காலஞ்சென்ற செல்லத் துரை ஆகியோரின் சகோதரியும், தேவராஜா (கொழும்பு), தணிகாசலம் (சுமன் லொட்ஜ் கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானேஸ்வரியின் அன்பு மாமியாரும், சுமன், ருஷ்யந்தி, பிரசாந்தி, கிருசாந்தி, யதூஷன், யதீஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 24-10-1996 வியா ழக்கிழமை அன்று தாவடி இந்து மயானத்தில் நடை பெற்றன. இதனை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சின்னத்தங்கச்சி
(சகோதரி)

இணுவில் தெற்கு,
இணுவில்.

(8937)

## நாகமுத்து செல்லையா

நுணாவில் கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற புகை யிரத தலைமைப் பாதுகாவலர் (Railway Head Guard) நாகமுத்து செல்லையா நேற்று (24-10-96) அதிகாலை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், தனலட்சுமி, தில்லைநாதன் (K.P.R. மில், நுணாவில் மேற்கு), இரங்கநாதன் (கணக்காளர், ஆஸ்திரேலியா), சிவநாதன் (ஆஸ்திரேலியா), குகநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், வை. தனபால சிங்கம் (இளைப்பாறிய பொறியியலதிகாரி, இ.போ.ச. டிப்போ, கிளிநொச்சி), தவபாக்கியம் (ஆசிரியை, பாலர் பாடசாலை), தர்சினி, கமலேஸ்வரி, வசந்தா ஆகியோரின் அருமை மாமனாரும், மயூரன், குருபரன், சுகந்தினி, அரவிந்தன், முகுந்தன், ரேகா, தினேஸ், சிவமீரா, சிவமித்திரா, சிவோதயன், ரம்யா ஆகி யோரின் அன்புப் பேரனும், தங்கம்மா, மயில்வாகனம், அன்னம்மா, காசிப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தம்பு நல்லையாவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24-10-96) வியாழக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செ. தில்லைநாதன்
(மகன்)

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி

(சி/3346)

## திரு. ச. இ. ஆனந்தராஜா

(இளைப்பாறிய பட வரைஞர்)

வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டு யாழ்ப் பாணம் மாட்டீன் ஒழுங்கையில் வசித்த திரு. ச. இ. ஆனந்தராஜா அவர்கள் 24-10-96 இல் காலமாகிவிட் டார்

இவர் வசாவிளான் திரு. ச. சவிரிமுத்துவினதும் (இளைப்பாறிய ஓவசியர்), திருமதி ச. மரியநாயகியின தும் மூத்த மகனும் மரிய நாயகி (நவமணி) அவர்களின் அன்புக் கணவரும் ராணி, றீற்றா, றோசா மற்றும் இமெல்டா (ஆஸ்திரேலியா), குலநாயகம், வேதநாய கம், சிவராசா (ஆஸ்திரேலியா), துரை (இங்கிலாந்து), காலஞ்சென்ற அரியநாயகத்தின் சகோதரனும், ராஜி (ஜேர்மனி), ராணி (டென்மார்க்), ரதி, ராஜன், நிர் மலராஜ் (பிரான்ஸ்), ஜெராட் (இந்தியா), பாமா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜன், இந்திரன், சர்மிலா, டொறின், தனபாலசிங்கம் ஆகியோரின் மாமனும் மேரிறோஸ், M.S பேரின்பநாயகம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26-10-96 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தி லிருந்து நல்லடக்கத்திற்காக அடைக்கல நாயகி ஆல யத்தில் பலி ஒப்புக்கொடுத்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா கோயில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. மரியநாயகி (மனைவி)
(நவமணி)

இல 5, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(43344)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

## நாளை

ஐப்பசி 10

சனிக்கிழமை

திதி: பூரணை
முன் இரவு 8.12 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பின் இரவு 3.12 வரை.
ராகுகாலம்: 9.03-10.33
சுபநேரம்: 8.03-4.33
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சுன்னாகம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் பலியானார்; மேலும் இருபது பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5-15 மணியளவில் இச்சம்ப வம் இடம்பெற்றது.

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்த அகதிகள் தங்கி யிருந்த — சுமார் நூறு குடி சைகளைக் கொண்ட — பிர தேசம் மீதே ஷெல்கள் விழுந்து வெடித்தன.

ஒரு குடிசையின் சுவரோரம் பலர் தஞ்சமடைந்திருந்த போது ஷெல் ஒன்று வீட்டின் கூரையைப் பிய்த்துக் கொண்டு வீழ்ந்து வெடித்துச் சிதறியதில் வாமதேவன் அருண்குமார் (பட்டு) (வயது 21) என்ற இளைஞர் பலியானார். ஒன்றரை வரு டங்களுக்கு முன்னர் திரு மணம் செய்த இவர் ஆறு மாதக் குழந்தை ஒன்றுக்குத் தந்தையாவார்.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

★ அருண்குமார் ரஜனி (வயது 18) —உயிரிழந்தவரின் மனைவி

★ இவர்களின் ஆறு மாதக் குழந்தையான மேரி ஸ்டெல்லா

★ பரியான் இறையவன் (வயது 70)

★ எமிலியான் கலாதேவி (வயது 10)

★ மாதன் அம்மா (வயது 75)

★ சிலோன்மணி இதய ராணி (வயது 26)

★ நாகமணி இரவிச்சந்தி ரன் (வயது 20)

★ தனராசா நிமலன் (வயது 14)

★ செல்வராசா கௌசி (ஒரு வயது)

★ செல்வராசா கலையர சன் (வயது 10)

★ வேலன் குணபாலசிங் கம்

★ சுப்பிரமணியம் நிமலன் (வயது 27)

★ இராசதுரை வின்சன்ட் (வயது 12)

★ சிலோன்மன் செல்வ ராணி (வயது 24)

★ மனோகரன் மதிவதனா (வயது 20)

★ அவரின் சகோதரி மனோகரன் பேபிசாளினி (வயது 10)

★ குகானந்தன் நாகேஸ் வரி (வயது 23)

★ சின்னத்தம்பி சரத்பாபு (வயது 9)

★ மோகன் துலக்ஷனா (வயது 13)

★ சின்னத்துரை கமல நாதன் (வயது 36), இவரின் சகோதரர் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பா ணம் இராசாவின் தோட்டத் தைச் சேர்ந்த இவர் தமது சகோதரரின் வீட்டுக்குச் சென்று அங்கு தங்கியபோது ஷெல் தாக்குதலுக்கு இலக்கா னார்.

காயமுற்றோர் தெல்லிப் பளை, சங்கானை, யாழ்ப்பா ணம் ஆஸ்பத்திரிகளில் சிகிச் சைக்குச் சேர்க்கப்பட்டனர்.

இந்த ஷெல் தாக்குதலை அடுத்து மேற்படி அகதிமுகாம் பகுதியில் வசித்து வந்த இந்த அகதிகள் இடம் பெயர்ந்து உடுவில் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

(உ-15-145)

## மரணம் குறித்து மர்மம்

வலி-தென் மேற்கு ஒக். 25

வலிகாமம் மேற்குப் பிர தேச சபையின் வட்டுக் கோட்டை உப அலுவலகப் பணியாளர் ஒருவரின் மரணத் தில் மர்மம் நிலவுவதாகத் தெரியவருகிறது.

சின்னவன் முருகேசன் (வயது 45) என்ற ஐந்து பிள் ளைகளின் தந்தையே மரண மானவராவார்.

சம்பவதினம் பிற்பகல் 2 மணியளவில் மரணமானவ ரின் வீட்டுக்கு காரில் வந்த மூவர் அவரை அழைத்துச் சென்றதாகவும் —

பின்னர் பிற்பகல் 5 மணி யளவில் சடலமாகக் கொண்டு வந்து வீட்டில் கொடுத்ததாக வும் சொல்லப்படுகிறது.

சின்னவன் முருகேசனின் சடலம் நேற்று முன்தினம் மாலை யாழ். ஆஸ்பத்திரி யில் ஒப்படைக்கப்பட்டது. கழுத்தில் ஆழமாகப் பதிந்த காயம் ஒன்று உள்ளது.

மரண விசாரணைக்காகச் சடலம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள் ளது.

(அ-145-15)

## சர்வதேச..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்பி னால் அதை நாம் வரவேற் போம். இதை நாம் எப்போ துமே கூறிவந்திருக்கிறோம்.

அரசியல் பேச்சுவார்த்தை யில் ஈடுபட்டு புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பிக்க விரும்புவதாக புலிகள் தெளிவு படுத்த வேண்டும். அத்த கைய நிலைமை ஏற்படுமா னால், நாம் அதனை வெகு வாக வரவேற்போம் அத்த கைய சூழ்நிலை ஏற்படும் வரை மத்தியஸ்தம் செய்வ தற்கு எதுவுமில்லை.

### குற்றம் சுமத்துவதாகும்

அத்துடன் மத்தியஸ்தம் என்பது ஒரு வகையில் தீர்ப் புக் கூறும் நடவடிக்கை போன்றதாகும். அங்கு குற் றத்தைச் சுமத்தும் அம்சம் ஒன்று காணப்படுகிறது.

இந்த அடிப்படையில் மூன் றாந் தரப்பின் மத்தியஸ் தத்தை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது அதுவும் குறிப்பாக நாட்டைப் பிளவு படுத்த விரும்பும் ஓர் இயக் கத்தின் விடயத்தில் மத்தியஸ் தத்தை நாம் விரும்புவதாக இல்லை.

### பிரபா மீதான வழக்கு

இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் மீது இலங்கை அரசு வழக்குத் தொடுத்திருக்கிறது. குற்றஞ் சுமத்தப்படும் சாதாரண ஒரு பிரஜையை விட பிரபாகரனை வித்தியாசமாக நடத்து வதற்குக் காரணம் எதுவும் இல்லை இது விடயத்தில் விசேடமாக ஒன்றுமில்லை.

குற்றங்களைப் புரிந்தவர் கள் மீது வழக்குத் தொடுக்க வேண்டியது இந்நாட்டு மக் களுக்கு நாம் செய்ய வேண் டிய கடமையாகும்.

ஒழுங்கமைவான ஒரு நாட் டிலே பிரபாகரனுக்கோ அல் லது வேறு எந்த நபருக்கோ சாதகமான வகையில் சட்டத் தின் செயற்பாடுகளை இடை நிறுத்த வேண்டிய தேவை உண்டு என்று நான் நினைக்க வில்லை.

மற்றவர்களை விட பிரபா கரனை வித்தியாசமாகக் கணிப்பதற்கு தேவையும் இல்லை என்றார்.

(அ-3)

## யாருடையது?

சுண்டிக்குளிப் பகுதியில் தாம் கண்டெடுத்த தங்க நகை ஒன்றை வாமினி வாம தேவன் உதயன் அலுவலகத் தில் ஒப்படைத்துள்ளார். தவறவிட்டவர்கள் உரிய அத் தாட்சிகளை தெரிவித்து அலு வலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(அ)

## நல்வரைக்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பிள்ளைகளின் தந்தை யான பொன்னு அழகரத் தினம் (வயது 40) ஆகியோ கந்தசாமி புலேந்திர ராசா (வயது 18) என்ற மாணவனுமே நேற்று வரை வீடு திரும்பவில்லை.

கடந்த நான்காம் திகதி இரவு ஒட்டுவெளியில் இடம் பெற்ற தாக்குதலின் போது படையினர் நான்கு பேர் பலி யான சம்பவத்திற்கு அடுத்த நாள் இவர்கள் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட் டது.

(உ-117)

## கடை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கு வைக்கப்பட்டுள்ளது அவற்றின் விவரம் வருமாறு.

கற்பூரம், நப்தலீன் உருண்டை, தீப்பெட்டி, பட் டறிகள், டைனமோக்கள், மெழுகு வர்த்தி, 'பட்டிக்' தயாரிக்கப் பயன்படும் துணி கள் தைக்கப்பட்ட பனியன் களும், ஜக்கட்டுக்களும், சப் பாத்து பொலிஷ், சுத்தியல், ஆணி, ஸ்கூறு ட்றைவர், கம்பி, றேசர் பிளேட், விளை யாட்டு 'ரிசுக்கள்', துப்பாக்கி கள், றெலஸ் கோப், வீடியோ நாடாக்கள், ஒடியோ நாடாக் கள், ரீ சேர்ட்டுகள் அச்சிடப் பட்ட உடைகள்.

(உ-3)


## NEW SCIENCE COLLEGE

குருநாதர் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(இராசா டீசல் அருகாமை)

புதிய பிரிவு ஆரம்பம்

**G.C.E. O/L 96**

**அலகு ரீதியான மீட்டல்**
**வினா விடை வகுப்புக்கள்**

ஆரம்பம் **28 - 10 - 96** பிற்பகல் 4 மணி.

ஆசிரியர் குழு:

★ ஆங்கிலம் — ஏ. எஸ் பிரசாத்
★ கணிதம் — பி. தர்மசீலன்
★ விஞ்ஞானம் — எஸ். சுபசீலன்
★ தமிழ் — ரி. அழகரத்தினம்

**ஆண்டு 10 (O/L 97),**
**ஆண்டு 9 வகுப்புக்கள்**
**புதிய பிரிவுகள்**

ஆரம்பம்:- 01- 11- 96 பிற்பகல் 4 மணி

(சி/3344) தொடர்பு:- நிர்வாகி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக் கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 25-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org